உ

சிவமயம்



சைவப் பெருவள்ளலார்

சேர். பொன். இராமநாதன் அவர்கள் இயற்றிய

# ஆத்திசூடி

# மந்திர விளக்கம்

கந்தரோடையைச் சேர்ந்த

அமரர் சம்பு நாகேஸ்வரி அவர்களின்

நினைவு வெளியீடு

16.02.2006

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



**தோற்றம்:**
**16.08.1925**

**மறைவு**
**17.01.2006**

# அமரர் சம்பு நாகேஸ்வரி

## திதி

**தை மாத அபரபக்க திருதியை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# ஆத்திசூடி மந்திர விளக்கம்

## 1ம் பாடம்

## அறஞ்செய விரும்பு

" **அறம்** "என்றது விதிவிலக்கு ரூபமாயிருக்குந் தருமத்தை " **செய விரும்பு** "என்றது அநுசரித்தே வரவேண்டும் என்ற ஆவலோடு இருப்பாயாக என்றவாறு.

இருள் நிறைந்த அறையில் அகப்பட்டு, இருளையும் இருளென்றறியாமல் வழிகெட்டுத் தடுமாறுகின்றவனுக்கு, ஓர் ஒளிக்கிரணம் சுகத்தைக் கொடுக்கும்.

அதுபோல் வஞ்சனை, பொறாமை, லோபம், மோகம், மதம் முதலிய விஷகுணங்களால் வாதிக்கப்பட்டு நன்மை எது, தீமை எது, என்று அறியாமல் மயங்குகிறவனுக்குச் சுகத்தைக் கொடுக்கும் பொருட்டுக் கருணாநிதியாகிய சிவபெருமான், தமது பேரறிவிலும் பேரன்பிலும் நின்று தோன்றிய ஒரு ஞானரேகையைக் கொடுத்தருளினார்,

இந்தச் சச்சிதானந்த ரேகை சனாதன தருமம் என்று கூறப்படும். அஃதாவது, ஆணவ இருளில் அகப்பட்டிருக்கும் ஆத்மா சதாகாலமும் தரிக்கத் தக்க சிவசக்தி.

இந்தத் தேவாத்மசக்தி விதிவிலக்கு ரூபமாய் நின்று ஜீவாத்மாவை மலத்தில்நின்று ஈடேற்றும், உத்தாரணஞ் செய்யும்.

எவன் விதிக்கப்பட்ட கர்மங்களை அநுசரித்தும், விலக்கப்பட்ட கர்மங்களை நிஷேதித்தும் வாழ்வானோ, அவனுக்குச் சித்தசுத்தி உண்டாகிப் பேரன்பும், பேரறிவும் தலைப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேதாகமங்களை ஆதாரமாகக் கொண்ட தர்ம சாஸ்திரங்களில் விளங்கும் விதி நிஷேதங்களை நன்றாக வாசித்து, அவற்றை மறவாமல், செய்யவேண்டிய கர்மங்களைச் செவ்வையாகச் செய்தும், செய்யத்தகாத கர்மங்களைச் செய்யாது விட்டும், இருப்பது ஆத்ம உத்தாரணத்துக்கு அவசியம்.

உலகவாழ்விலுள்ள கர்மங்கள் யாவும் ஜீவனோபாய கர்மமென்றும், ஆத்மோபாய கர்மமென்றும், இருவகைப்படும். இவ்விருவகைக் கர்மங்களுக்கும் விதி விலக்குக்கள் உண்டு.

ஜீவனோபாய கர்மங்கள் அறிவுக்கும் அன்புக்கும் மாறாயிருந்தால் அக்கர்மங்களை அநுசரிக்கின்றவர்கள் தாழ்ந்த ஜாதிகள் எனப்படுவார்கள்.

அறிவிலும் அன்பிலும் பிரதிஷ்டைபெற்ற ஜீவனோபாய கர்மங்களை அநுஷ்டிக்கின்றவர்கள் உயர்ந்த ஜாதிகள் எனப்படுவார்கள்.

ஜீவனோபாயங்கள் எவ்விதமிருப்பினும், ஆத்மோபாய கர்மங்களைப் பக்தியோடு செய்து வருகின்றவர்கள் தங்களை மலதோஷங்களினின்று மெல்ல மெல்ல உத்தாரணஞ் செய்வார்கள்.

பதினான்கு உலகங்களிலும் பிரசித்திபெற்ற ஆத்மோபாய கர்மங்களை, யஜ்ஞம், தானம், தபசு என்ற சிவ ஆராதனையும் ஈகையும், பொறுமையும் என்றறிக.

இவற்றின் விதிகளைத் தேடி அறிந்து அநுஷ்டிக்கின்வர்களே அறிவாளிகள். தேடுதற்கும், அறிதற்கும், அநுஷ்டித்தற்கும் காரணம் விரும்புதலேயாதலால் எங்கள் அருமைத் தாயாகிய ஔவைநாயகி " அறஞ்செய விரும்பு " என்றார். " அறனை மறவேல் " என்றும் வற்புறுத்தி இருக்கின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2ம் பாடம்

### ஆறுவது சினம்

" சினம் "என்றது கோபம் " ஆறுவது "என்றது தணியத்தக்கது என்றவாறு,

இரும்பிலே சூடு ஏறுவதுபோல மனசிலே கோபம் ஏறும்.

கோபம் ஏறின மனம் தானும் வெந்து கண்களைச் சிவக்கச் செய்யும், பெருமூச்சை உண்டாக்கும். நெஞ்சைப் படபடக்கப் பண்ணும். கைகால்களை உதறுவிக்கும். வாக்கு நிதானத்தை அழிக்கும். அறிவை மயக்கும்.

கோபத்தால் அறிவு மயங்க, தீய சொல்லும், தீய செயலும் தோன்றும். அவைகளால் பிறர் வருந்துவார்கள். பகைவராகவும் வருவார்கள்.

ஒருவன் மனசில் ஏறிய கோபம் அவனையே சுடும். பிறரால் அவனுக்கே துன்பத்தையும் வருவிக்கும். இந்த உண்மையை அறிந்தவர்கள் கோபத்தைத் தணிக்க முயல்வார்கள்.

இரும்பில் ஏறிய சூடு நெடுநேரம் ஆறாமல் நிற்கும். தங்கத்தில் ஏறிய சூடு சீக்கிரம் தணிந்துவிடும்.

அதுபோல், தீய மனசில் ஏறிய கோபம், நெடுநேரம் நின்று அம்மனமுடையவர் தம்மையும், அடுத்தவர்களையும் வாதித்து துக்கத்தில் விழுத்தும். நல்ல மனசில் ஏறிய கோபம் சீக்கிரத்தில் நீங்கும்.

மனசையும் அறிவையும் கெடுக்கத்தக்க கோபத்தைச் சாதியாமல் ஜாக்கிரதையாக மெல்ல மெல்லத் தணித்து முற்றாக ஒழிக்கவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 3ம் பாடம்

### இயல்வது கரவேல்

" **இயல்வது** " என்றது உனக்கு இசைந்ததை, " **கரவேல்** " என்றது மறைக்காதே, உன்னிடம் இல்லையென்று சொல்லாதே என்றவாறு.

ஒரு வறியவன் ஆயினும், நோயாளி ஆயினும், பரோபகாரி ஆயினும் வந்தால், உனக்கு இசைந்ததை இல்லை என்னாமல் கொடுப்பது உன்னுடைய கடமை.

இது சிறுவருக்கும் முதியவருக்கும் உரிய முறை.

ஒருவனுக்குப் பத்து ரூபா வருமானம் இருந்தால், தனக்கு அவசியமானது போக மிச்சத்தில் ஒரு பங்காவது தரும வழியில் விடவேண்டும்.

மிச்சம் இருந்தும் என்னிடம் ஒன்றும் இல்லை என்று சொல்வது அறம் விரும்பலுக்கு நேர் விரோதம்.

இப்படி வஞ்சனையைப் பழகி வருகின்றவனுடைய மனம் பழுதுபடும். அது அவனை அறத்தில் நிறுத்தாமல் மறம் என்ற பாபவழியிலே செலுத்தி விடும்.

## 4ம் பாடம்

### ஈவது விலக்கேல்

"**ஈவது**" என்றது கொடுத்தலையும் கொடுக்கப்படும் பொருளையும் "**விலக்கேல்**" என்றது தடுக்காதே என்றவாறு.

ஒருவன் ஒருபொருளை ஒருவனுக்குக் கொடுக்கும்பொழுது அதைக் கொடாதே என்று சொல்லுவது அன்பு வளர்ச்சிக்குத் தடையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த உலகத்தில் நாங்கள் பிறந்தது அன்புப் பெருக்கத் துக்கும் அறிவு விருத்திக்குமே.

ஒருவனுடைய துன்பங்களைக் கேட்டபொழுது அன்பினால் மனம் உருகும். அந்த உருக்கத்தில் அவனுக்குக் கொடுப்போம் என்ற எண்ணம் வரும். அந்தச் சமயத்தில் ஒருவன் தடுத்தால், கிணற்றில் சுரக்கின்ற நீர் ஊற்றுத் தடைப்பட்டது போல, வந்த அன்பு மறைந்துவிடும்.

அன்பும் பெருக்கையும் அதனோடு வரும் மகிழ்ச்சியையும் ஒருவன் பலமுறையும் அநுபவித்தால் கொடையை மேன்மேலும் செய்தே வருவான்.

இந்த மேலான அற நிலையையும் அதனால் பிறருக்குக் கிடைக்கும் சுகங்களையும் தடுப்பவன் பெரும் பாவி.

ஈவதை விலக்கினவன் தெய்வத்தின் அன்பைப் பெறமாட்டான். அவனுக்கு இந்த உலகத்திலே மெய்யான சுகம் இல்லை. மேல் உலக சுகமும் இல்லை.

## 5ம் பாடம்
## உடையது விளம்பேல்

**"உடையது"** என்றது உனக்கு அருளப்பட்ட நற் குணங்க ளையாவது செல்வப் பொருளையாவது? **"விளம்பேல்"** என்றது சொல்லாதே என்றவாறு.

தெய்வம் உனக்குக் கொடுத்த நற்குணங்களைப் பற்றிப் பாராட்டிப் பேசுவாயாகில், வாயடக்கம் என்ற நன்னிலை குன்றும். கேள்வியுற்ற சிலர் பொறாமை கொள்ளுவாாகள். வேறு சிலர் இவன் மூடன் என்று அவமதிப்பார்கள்.

உன்னிடத்தில் உள்ள பணம், நகை முதலிய பொருள்களைப் பற்றி வெளியிட்டால், பணம் இல்லாதவன் கடன் கேட்பான். நகை இல்லாதவள் இரவல் கேட்பாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தகாதவர்களுக்குக் கடனாவது இரவலாகாது கொடுத்தால் தொல்லை உண்டாகும். பணமும் நகையும் நஷ்டமாகும்.

உடையது விளம்பல், வாய் அடக்கத்தைக் கெடுத்து, பிறர் மனசில் பொறாமையை உண்டாக்கி, நல்லோருடைய அபிமானத்தை இழப்பித்து, பொருளை நாசமாக்கி, அறநெறியினின்று விலக்கி விடும்.

ஆதலால் அறிவிலே சிறந்த பெரியோர்கள் உடையது விளம்பேல் என்று உபதேசித்தார்கள்.

## 6ம் பாடம்

### ஊக்கமது கைவிடேல்

**"ஊக்கம்"** என்றது முயற்சியை, அது என்றது அசை, **"கைவிடேல்"** என்றது வழுவ விடாதே என்றவாறு.

எங்களுடைய வல்லபங்கள் எல்லாம் தெய்வத்தால் கொடுக்கப்பட்டன. ஒரு தடாகத்தில் எப்படித் தண்ணீர் வந்து நிற்குமோ, அதுபோல, ஜீவ ஆத்மாவில் சக்திகள் வந்து குமியும். அந்தச் சக்திகளைப் பலதிக்கில் ஓடிச் சிதறவிடாமல், நல்ல பலனைத் தரும் வழியிலே செலுத்த வேண்டும்.

கையிலே கிடைத்த நல்ல பொருளைப் புத்திமான் நழுவவிடாமல் காப்பான். அதுபோல ஆத்மாவில் ஊறும் சக்திகளை வீண்போகாமல் சேகரித்துப் புண்ணிய வழிகளில் விடவேண்டும்.

முயற்சி என்னும் ஆத்மசக்தி, நல்ல நினைவுகளாகவும், நல்ல செயல்களாகவும் விரியும். நல்ல நினைவு தோன்றினவுடனே, அதை மறையவிடாமல் மனசிலே நிறுத்தி, சீக்கிரத்தில் செயலுக்குக் கொண்டுவர வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்படி நல்ல நினைவை நிறைவேற்றினால் இச்சித்த பலனைப் பெறலாம். தோன்றிய நல்ல நினைவுகளைச் சிதையவிட்டால் இந்த உலக வாழ்வு பயன்படாது.

நல்ல வாழ்வுக்குரியவர்கள், நல்ல சிந்தனை உதயமான வுடன், விழிப்பாக இருந்து, அதைத் தணியவிடாமல் மனசில் உறுதியாக்கிப் பெருக்கிச் செயலுக்குக் கொண்டு வந்து, நல்ல பலன்களைப் பெற்றுத் தாங்களும் தங்கள் உறவினரும், அநுப விப்பார்கள்.

அவர்கள் நன்முயற்சி என்னும் ஊக்கத்தால், கல்விப்பொரு ளையும் செல்வப்பொருளையும், சம்பாதித்து, அநேக தர்மங்களை நாட்டிக் கீர்த்தியுடையவர்களாகிச் சிவபெருமானுடைய திருவடியைச் சேருவார்கள்.

## 7ம் பாடம்

## எண்ணெழுத் தீகழேல்

**"எண்"** என்றது அளவைக் கணக்குக்கு உரிய உபாயங் களையும் **"எழுத்து"** என்றது எழுத்துச் சொல்வசனங்களின் இயல்புகளையும், இகழேல் என்றது அறிவது அவசியம் இல்லை என்று நீ நினைத்தல் ஆகாது என்றவாறு.

எண்ணி அறிதலுக்கு தொடர்ந்து பிடிக்கும் நினைவும், ஞாபகசக்தியும் வேண்டும். பலர் எண்ணினதை எழுத்து மூலமாகக் கூட்டிக், கழித்துப், பெருக்கி, வகுத்து அறிவார்கள்.

சிலர் எழுத்துக்களை உபயோகியாமல், மனசினாலேயே கணிப்பார்கள், கையுள்ளவனுக்கும், ஏடுள்ளவனுக்கும், எழுத்தாணி யுள்ளவனுக்கும், எழுத்துக் கணக்குச் சித்திக்கும். கருவிகள் இல்லாதவனுக்கு எழுத்துக் கணக்குப் பயன்படாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனசிலே கணிக்கப்படும் கணக்கு விஷேச வல்லபத்தைப் தரும். இந்த மானச கணிதத்தை அப்பியாசஞ் செய்தவர்கள் சபையிலே சிறந்தவர்களாய் விளங்குவார்கள்.

எழுத்தானது ஒலியைரூபிக்கும், வாக்கில் நின்று பிறந்த ஓசையையும் வேறுவழியால் தோன்றின ஒசையையும் எழுத்தால் ரூபிக்கலாம். கண்ணால் கண்டதையும் மூக்கால் மணந்ததையும், நாவால் சுவைத்ததையும், உடலால் பரிசித்ததையும் எழுத்தானது கற்றவர் யாவர்க்கும் அறிவிக்கும். உன் அநுபவங்களையும் பிறர் அநுபவங்களையும் ஆயிரம் யோசனைக்கு அப்பால் உள்ளவர்களுக்கு அது தெரிவிக்கும். இப்படிப்பட்ட வல்லபத்தை யுடைய எழுத்தை நாள்தோறும் விரைவாக மணிபோல் எழுதப் பழகிவந்தால் அது நன்முயற்சிகளுக்கு உற்ற துணையாகும்.

இந்த எண்ணும் எழுத்தும் என்ற சக்திகள் சிவபெருமானால் புண்ணிய ஆத்மாக்களுக்கு அருளப்படுவன. அரிய பொருளாதலால் அவைகளை மிக்க அன்போடு பாதுகாத்து வரவேண்டும். இந்தச் சக்திகள் உள்ளத்திலே பிரகாசியாது போனால், அவற்றை மேன் மேலும் மனோபாவனை செய்து துலக்க வேண்டும்.

எண்சுவடி என்ற கணித சாஸ்திரத்தை மானசமாக அப்பியாசஞ் செய்தவனுக்கு அளவை விஷயங்களில் தூரதிருஷ்டி யுண்டாகும்.

எழுத்து, சொல், தொடர்மொழிகளின் இயல்பை விரித்துக் கூறும் இலக்கண சாஸ்திரங்களைக் கசடறக் கற்றால், வசன ரூபமாயும் பா ரூபமாயும் உள்ள இலக்கியத்தில் இருக்கின்ற மேலான அறிவுகளை எளிதில் அறியலாம். அதுவுமன்றித் தான் கற்ற கல்வியை அலங்காரமாகவும் பிறருக்குப் போதிக்கலாம்.

## 8ம் பாடம்
## ஏற்ப திகழ்ச்சி

**“ஏற்பது”** என்றது கொடுப்பதற்கே எழுந்தருளியிருக்கும் சிவபெருமானிடத்தும் தெய்வ சொரூபங்களாகிய தந்தை, தாய், குரு முதலியவர்களிடத்தும் அன்றி, மற்றவர்களிடத்து கை நீட்டி வாங்கல், **“இகழ்ச்சி”** என்றது பெரியோர்களுடைய கொள்கைப்படி இழிவான செயலாகும் என்றவாறு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உனக்கு ஒரு பொருள் வேண்டுமானால் உன்னைக் காப்பதற்குக் கடமை பூண்ட தாய் தந்தையரிடம் கேட்கலாம். அவர்கள் மூலமாகப் பெறக்கூடாத கல்வியைத் தக்க ஆசானிடம் சென்று அவருடைய பணிகளைப் பத்தியோடு செய்தால், உன் மனசிலே தோன்றிய விருப்பத்தை அவர் அறிந்து, உன்னுடைய நிலைக்கேற்றபடி கல்வியை அருளுவார். பத்தினிகள் தங்கள் பதிகளிடம் வேண்டுவதைப் பெறலாம்.

அப்படியே ஆத்மகோடிகளுக்குப் பரமபதியாயிருக்கின்ற சிவபெருமானிடத்தும், எங்கள் சுகதுக்கங்களை விண்ணப்பஞ் செய்து, நாங்கள் விரும்பினவற்றைப் பெறலாம்.

பூரண அன்பில்லாத ஸ்தானங்களில் சென்று இரத்தலாவது, வாங்கலாவது மானபங்கமாகும்.

கொடைக்கு உரிமையற்றவரிடம் வாங்குவது கடனாகும். அக்கடனை இப்பிறவியிலே அன்போடு தீர்க்காதவன் வேறொரு பிறவியில் தீர்ப்பதற்கு ஆளாகுவான்.

நீ ஒருவனுக்குச் செய்த உதவிக்காக, அவன் அன்பு கூர்ந்து செய்யும் பிரதி உபகாரத்தை ஏற்பது உலகத்தாரால் இகழ்ச்சியாக எண்ணப்படாத தாயினும், அந்தக் கைம்மாற்றைப் பெறாதிருந்தல் சித்தசுத்திக்கு அனுகூலமாகும்.

## 9ம் பாடம்

## ஐய மீட்டுணர்

**"ஐயம்"** என்றது உனக்குள்ள பொருளை ஐந்து பாகமாகப் பிரித்து அதில் ஒரு பாகமாகிய ஐயத்தை, **"இட்டு உண்"** என்றது உரியவர்களுக்குக் கொடுத்து நீயும் புசிப்பாயாக என்றவாறு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருமசாஸ்திரம் தினசம்பத்தில் ஒரு கூற்றைப் பிதிர்களுக்கும், ஒரு கூற்றைத் தான் உபாசித்து வரும் தெய்வத்துக்கும், ஒரு கூற்றைச் சாதுக்களுக்கும் வறியவர்களுக்கும், ஒரு கூற்றை உறவினர்களுக்கும் மற்றக் கூற்றைத் தனக்கும் உபயோகிக்க வேண்டுமென்று விதிக்கின்றது.

பிதிர்களுக்கு மாசாந்தரம் எள்ளும் தண்ணீரும் இட்டுத் திருப்தி பண்ணி வரவேண்டும்.

தெய்வத்துக்குக் காலையிலும் மாலையிலும் ஒரு புஷ்பமாவது ஒரு பத்திரமாவது அன்போடு பாதத்தில் இட்டு வழிபாடு செய்ய வேண்டும்.

சாதுக்களுக்கும், வறியவர்களுக்கும், அரிசி அன்னம் பணம் வஸ்திரம் முதலியவற்றைக் கொடுத்துச் சந்தோஷிப்பிக்க வேண்டும்.

இனத்தவர்களுக்கு ஆகாரம், விகாரம், யாத்திரை முதலிய வற்றால் அன்பைப் பெருக்க வேண்டும்.

தனக்குரிய ஆத்ம, அநாத்ம சுகங்களைக் கவனித்தல் வேண்டும்.

எனவே உனது பொருளை ஐந்து பாகமாய்ப் பிரித்து ஒவ்வொரு ஐயத்தையும் உரியவர்களுக்குக் கொடுத்து அநுபவிப்பதே புண்ணிய வாழ்வு.

## 10ம் பாடம்

## ஒப்புர வொழுகு

**"ஒப்புரவு"** என்றது சமத்துவ நிலையை, **"ஒழுகு"** என்றது நீ அநுசரி என்றவாறு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமத்துவ நிலையில் நீ புத்தியை நிறுத்தி அதன் பிரகாசத்தால் விஷயங்களை விசாரித்து வாழவேண்டும்.

சமத்துவ நிலை பாரபக்ஷ நிலைக்கு எதிர்மறை. உன்னுடைய மனசில் ஒரு விருப்பாயினும், ஒரு வெறுப்பாயினும் வந்தேறினால், அந்த மனசைப் பற்றிநிற்கும் புத்தி, அவ்விருப்பாலாயினும் வெறுப்பாலாயினும் இழுபட்டு, முன்நிற்கும் விஷயத்தை ஒழுங்காக விசாரியாது, விருப்பு வெறுப்புக்களை நீக்கியே புத்தியை விசாரணையில் விட வேண்டும். ஒருவன் தனது விருப்பையும் வெறுப்பையும் ஒப்புரவு செய்ய அவன் மனம் சமநிலையைப் பெறும்.

அந்தச் சமநிலையில் புத்தியை நிறுத்தினவன், அதன் பிரகாசத்தால், தன்னைச் சூழ்ந்திருக்கும் பொருளை நன்றாக அறிவான்.

தராசுத் தட்டுக்கள் உயர்வு தாழ்வற்று நிற்கும் சமயத்தில் ஊசி ஒரு பக்கமும் சாயாமல் நேராக நிற்பது போலப் புத்தி பாரபக்ஷமின்றி விஷயங்களை விசாரிக்குமாகில் உலகம் அவனைப் புத்திமான் என்று கொண்டாடும்.

புத்தி யாவரிடத்தும் உள்ளதே ஆயினும், மாறி மாறி மனசில் தோன்றும் விருப்பு வெறுப்புக்களுக்கு அடிமைப்பட்டவனைப் புத்திமான் என்று உலகம் போற்றாது.

ஒப்புரவு இல்லாத மனம், புத்தியின் பிரகாசத்தையும், விசாரிக்கும் வல்லபத்தையும் கெடுத்து விடும். ஆதலால் மனசின் ஒப்புரவு ஆகிய சமநிலையை எப்பொழுதும் அநுசரித்தல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 11ம் பாடம்

## ஓதுவ தொழியேல்

**"ஓதுவது"** என்றது தேவாரம், திருவாசகம் முதலிய தமிழ் வேதங்களை **"ஒழியேல்"** என்றது ஒரு நாளாவது பாராயணம் பண்ணாமல் இராதே என்றவாறு.

ஆத்மாவின் நன்மைக்காக ஓதத்தக்க நூல்களைத் தலையாய ஒத்து என்றும், இடையாய ஒத்து என்றும், கடையாய ஒத்து என்றும் பெரியோர்கள் பிரித்தார்கள்.

சரீர விருத்திக்காகவும் விஷய சுகத்துக்காகவும் கற்கவேண்டிய நூல்கள் கடையாய ஒத்திலும் அப்பாற்படுத்தி விலக்கப்பட்டன.

தேக விஷயங்களைப் பற்றிய நூல், சாமர்த்தியத்தையும், தோன்றி அழியும் சிற்றின்பங்களையும் தரத்தக்கதேயன்றி, நற்குணங்களையும், சாந்தியையுங் கொடாது.

வஞ்சகம், பொறாமை, லோபம் முதலிய துஷ்ட குணங்களை மனசினின்று அகற்ற வேண்டுமாகில், தேவாரம், திருவாசகம் முதலிய திரு முறைகளையும், சிவபுராணங்களையும், மகாபாரதம், ராமாயணம் முதலிய இதிகாசங்களையும், புண்ணிய பாப கர்மங்களை விளக்குகின்ற தர்ம சாஸ்திரங்களையம் ஓயாது கற்றுணரவேண்டும்.

இப்படித் தினமும் ஓதிவராதவனுடைய மனசை, மெல்ல மெல்லக் குளத்துநீரைப் பாசி மூடுவது போலத் தீய ஆசைகளும், வஞ்சிக்கும் நினைவுகளும், சேர்ந்து மூடும்.

உலக வாழ்வின் விஷயங்களுக்குப் பரிகாரம் திவ்விய வேதாகம சாஸ்திரங்களே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 12ம் பாடம்

## ஔவியம் பேசேல்

**"ஔவியம்"** என்றது அப்பிரீதியைக் கொடுக்கும் வசனங்களை **"பேசேல்"** என்றது சொல்லாதே என்றவாறு.

உன்னைப் பற்றி ஒருவன் தகாத வார்த்தையைப் பேசினால் உன் மனம் எவ்வளவு வருத்தப்படுமோ என்றதை அறிந்த நீ, பிறரைப் பற்றித் தகாத வார்த்தைகள் பேசலாகாது. அன்பற்ற சொல்லாகிய ஔவியத்தைச் கேட்டவர்களுடைய மனசில் அது பகையை உண்டாக்கும். உன் மனசையுங் கெடுக்கும்.

உன் மனசில் நல்ல நினைவுகள் உதித்தால், அவை அதற்குச் சுகத்தைக் கொடுக்கும். தீய சிந்தனை மனசில் தோன்றினால் அதைப் பழுதுபடுத்தும்.

மடியில் கட்டிவைத்த மலம் மடியைக் கெடுப்பது போல, அன்பில்லா நினைவுகளை அநுசரிக்கின்ற மனமும் அன்பிலா வார்த்தைகளை உச்சரிக்கின்ற வாக்கும் கெட்டே போகும்.

அன்பில்லாத சொற்களைக் கேட்டவர்களுடைய மனசிலும், கோபம், வெறுப்பு, பகை முதலிய மலங்களேறி அதனை அசுத்தப்படுத்தி, மிக்க விரோதங்களை விளைவிக்கும்.

சகல லோக முயற்சிகளும், சிவபுண்ணியங்களும் மனசால் செய்யப்படுவதால் அதைப் பழுதுபடுத்துகின்றவன் மகா பாபி.

தன்னிடத்தும் பிறரிடத்தும் அன்பு ஊறும்படி பேசுகின்றவன், தன் மனசையும் பிறர் மனசையும் காப்பாற்றுபவனாகிப் பெரும் புண்ணிய பலன்களை அடைவான்.

சகிக்கக் கூடாத வார்த்தைகளைக் கேட்ட குணசீலன், தன்மனசு அவற்றைப் பற்றவிடாமல் பாதுகாத்து, ஐயோ! இவன் ஈசுவர தண்டத்துக்கு ஆளாகுகின்றானே என்று இரங்குவன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த இரக்கமாகிய அன்பு மனசைப் பரிசுத்த நிலையிலே நிறுத்தி மேலான ஞாபகத்துக்கு அதிகாரி ஆக்கும்.

## 13ம் பாடம்

### அஃகஞ் சுருக்கேல்

**"அஃகம்"** என்றது தானியத்தை விளைவிக்கும் நிலங்களை **"சுருக்கேல்"** என்றது பங்கம் பண்ணிக் குறைக்காதே என்றவாறு.

நெல்லு முதலிய தானியம் வளரும் வயல்களை அவமதித்து நிரவித் தோட்டங்கள் ஆக்குதல் புத்தி யன்று.

ஒவ்வொரு தேசமும் தமக்கு வேண்டிய தானியங்களை விளைவித்துக்கொண்டு இருந்தால் அவைகளுக்கு ஒருபோதும் கேடு வராது.

அந்நிய தேசங்களோடு சம்பந்தப்பட்ட வியாபாரிகள், கப்பல் மூலமாகவும் வேறு வகையாகவும் அத் தேசங்களில் இருந்து தானியங்களை வருவித்து மலிவாக விற்பதால், சுவதேசிகள் தங்கள் வேளாண்மைத் தொழிலை விட்டு, வயல்களை மேடாக்கித் தோட்ட்ங்களாகச் செய்வார்கள். தோட்ட்ங்களால் வரும் பிரயோசனம் அன்னத்தைப்போல ஜீவனைக் காக்கக் தக்கத்தன்று

மேலும் அந்நிய தேசத்துத் தானியம் பகை காலத்திலும் பஞ்சகாலத்திலும் தடைப்பட்டு விடும்.

இவை பற்றிக் புத்தியுள்ள அரசர்களும், வேளாளர்களும் தங்கள் தேசத்து வயல்களைப் பங்கப்படுத்தாமலும் தரிசாக விடாமலும் திருத்தி, வருஷந்தோறும் சூரியபகவானுக்கும், வர்ண பகவானுக்கும் பிரீதி செய்து, கால போகங்களை எதிர் பார்த்து நிற்பார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 14ம் பாடம்

### கண்டொன்று சொல்லேல்

**"கண்டு"** என்றது அறிவினால் உள்ளத்தில் உணர்ந்ததற்கு **"ஒன்று"** என்றது விரோதமான வார்த்தைகளை **"சொல்லேல்"** என்றது கூறாதே என்றவாறு.

மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் ஐம்பொறிகள் தத்தம் விஷயங்களாகிய ஊறு, சுவை, ஒளி, நாற்றம், ஓசை என்பவைகளை அறியும்.

இவ்வாறு அறியப்பட்ட விம்பங்களின் பிரதி விம்பங்களை மனம் பற்றினால் அந்தப் பிரதி விம்பங்கள் நினைவுகளாகும். அந்த நினைவுகளைப் புத்தி விசாரித்து நிச்சயித்தவுடனே ஆத்மா அறியும்.

எனவே ஐம்பொறி வழியால் தோன்றின விஷயங்களையும் அவற்றினின்று பிரதி விம்பித்த நினைவுகளையும் அவற்றின் தீர்மானங்களையும் ஆத்மா சாக்ஷி ரூபமாய் நின்று காணும்.

இப்படி ஆத்மா கண்டதற்கு ஒவ்வாத வார்த்தைகளைச் சொன்னால், சத்திய வாக்கு விருத்தியுண்டாகாது. வர வரக் கெட்டே போகும்.

தாயுமானசுவாமிகள் தமது பாடல் ஒன்றில் "பொய் வார்த்தை சொல்லிலோ திருவருட்கு அயலுமாய்ப் புன்மையன் ஆவேன் அந்தோ" என்றார்.

புன்மை என்ற இழிவான நிலை, அசத்திய வாக்காலும் கபடுள்ள மனசாலும் ஆத்மாவுக்கு வந்து பொருந்தவே, அது ஆத்மாவைத் திருவருளுக்கு அந்நியமாக்கி, துக்க சமுத்திரத்தில் ஆழ்த்தும்

ஆதலால் சாக்ஷியாக நின்று ஆத்மா கண்டதற்கு விரோதமாக உரைத்தல் ஆகாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 15ம் பாடம்

### ஙப்போல் வளை

**"ஙப்போல்"** என்றது ஒரு தமிழ்ச் சொல்லிலும் பிரயோசனப்படாது நிற்கும் தன்னினங்களைத் தழுவி அவைகளை வழங்குவித்து வரும் ஙகர அஷரம்போல, **"வளை"** என்றது நீயும் பிரயோசனமற்ற உற்றாரை இகழ்ந்து வெறுக்காமல், அநுசரித்து வரவேண்டும் என்றவாறு.

தமிழ்ப் பாஷையில் **"ங"** என்ற அஷரமும், **"ங"** என்ற அஷரமும் தவிர, மற்ற **"ஙா"** முதலிய அஷரங்கள் உபயோகிக்கப்படாது நிற்கின்றன. இப்படிப் பயன்படாது நிற்பினும் அவற்றை ஙகரம் ஜீவிக்கச் செய்துகொண்டே இருக்கின்றது.

அதுபோலத் தமக்காவது பிறருக்காவது உபயோகமற்ற இனத்தவர்களை, நீயும் அன்பு வார்த்தையாலும், ஈகையாலும் தூக்கி, அறநிலையில் நிறுத்த வேண்டும்.

இப்படித் தனது அன்பைக் குன்றவிடாமல், எவன் கல்வி செல்வம் முதலியவற்றால் சிறப்பிழந்த உற்றாரையும் ஆதரிப்பானோ, அவன் திருவருளுக்கு ஆளாவான். ஏனெனில், திருவருள் எல்லோருக்கும் மழையையும், வெய்யிலையும், அன்னத்தையும், பானத்தையும் அநுக்கிரகித்து வருவதால் என்க.

## 16ம் பாடம்

### சனி நீராடு

**"சனி"** என்றது சனீசுவரன் அதிஷ்டான தேவதையாய் நின்று நடத்தும் வாரமாகிய சனிக்கிழமையில் **"நீராடு"** என்றது எண்ணெய் தேய்த்துச் சிகைக்காய்கூட்டினால் அங்கத்தைச் சுத்தி செய்து நீரில் ஸ்நானஞ் செய்வாயாக என்றவாறு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கள் தேசம் உஷ்ணபூமி ஆதலால், தேகத்தின் தோல் வரட்சி அடையாமலும், நாடி நரம்புகள் சூட்டினால் குன்றாமலும் இருக்கும்படி பெரியோர் கற்பித்த உபாயம் எண்ணெய் தேய்த்து முழுகுதல் என்ற அப்பியங்க ஸ்நானம்.

மநுஸ்மிருதி முதலிய தரும சாஸ்திரங்களில் ஸ்நான விதிகள் கூறப்பட்டிருக்கின்றன. வியாச ரிஷியினது புத்திரராகிய பராசர ரிஷி தாம் ஐயாயிரம் வருஷத்துக்கு முன்னே இயற்றிய ஸ்மிருதியில் அப்பியங்க ஸ்நானம் சரீரத்தைப்பற்றிய மலங்களை நீக்கின்றபடியால் மலாபகர்ஷண ஸ்நானம் எனப்படும் என்று கூறுவர்.

ஜ்யோதிஷ (சோதிட) சாஸ்திரப்படி ஞாயிற்றுக்கிழமையில் அந்த ஸ்நானத்தைச் செய்பவர்களுக்குச் சந்தானமும், திங்களில் சாந்தகுணமும், செவ்வாயில் அற்பாயுளும், புதனில் சம்பத்தும், வியாழனில் தரித்திரமும், வெள்ளியில் வியாதியும், சனியில் தேக சுகம், மனோ சுகம், ஆத்ம தெளிவு முதலியவைகளோடு பல சித்திகளும் உண்டாகும் என்றும் கூறினார்.

சனி நீராடு என்ற மந்திரம் மனம் வாக்குக் காயம் என்ற திரிகரணங்களால் செய்யப்பட்ட அறங்களை ஸ்திரப்படுத்தும் பொருட்டு உபதேசிக்கப்பட்டது.

## 17ம் பாடம்

## ஞயம்படவுரை

**“ஞயம்பட”** பிறருக்கு நல்ல பிரயோசனம் உண்டாகும்படி **“உரை”** என்றது சுகவார்த்தைகளைப் பேசு என்றவாறு.

வீண் வார்த்தைகளை நீக்கி நல்ல விஷயங்களைப் பற்றிப் பேசுவதே சிறுவருக்கும் முதியோருக்கும் பொதுவான அறம்.

ஒருவரோடு ஒருவர் சம்பாஷிக்கும் பொழுது தம்மைப் புகழ்ந்து பேசாமலும், தங்களுக்குள்ள பொருளைப் பாராட்டாமலும், அதட்டாலும், பழிக்காமலும், உருட்டாலும், மருட்டாலும், மிகைபடப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேசாமலும், எடுத்த விஷயம் முடியமுன் வேறொன்றைப் பற்றாமலும், கூறியதை மீளக் கூறாமலும், இரையாமலும், பெருநகை செய்யாமலும் பேச வேண்டும்.

மனசிலே தோன்றியதெல்லாம் வாய்திறந்து பேசக்கூடாது. புத்தியால் ஆராய்ந்து, இது பேசத் தக்கதோ தகாததோ என்று நிச்சயித்துக், கேட்போருடைய கால வசதிகளையும், குணபேதங் களையும் அறிந்து, சொல்வதை இன்பமுறக் கூறவேண்டும்.

அற்ப கதைகளையாவது தமக்குச் சம்பவித்த அற்ப துன்பங்களையாவது பெருப்பித்துப் பேசலாகாது. பிறருக்கு அருளப்பட்ட செல்வம், கல்வி, சுகானுபவம் முதலியவற்றைச் சிறுப்பித்துப் பேசலாகாது.

முன்னிலையில் நிற்பவர்களோடு சந்தோஷமாகப் பேசிச், சென்றபின், தூஷித்தல் ஆகாது. உனக்கு ஒரு கஷ்டம் வர எப்படி உன் மனம் பதைக்குமோ, அப்படியே பிறருக்குக் கஷ்டம் வர அவர் மனமும் பதைக்குமென்று ஆலோசித்துச் சுகவார்த்தைகளைப் பேசவேண்டும்.

சாதுக்கள் சகவாசத்தாலாவது, நற் கல்வியாலாவது அறியப் பட்ட சங்கதிகளைத் தக்க சமயம் பார்த்து அறியாதவர்களுக்கு உபகதைபோல் அன்புடன் உரைத்தல் வேண்டும்.

பயன்படப் பேசுதல், வாக்கினாற் செய்யப்படும் அறமாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 18ம் பாடம்

## இடம்பட வீடெடேல்

**"இடம்"** என்றது இடம், விஸ்தாரம் **"பட"** என்றது ஆக, **"வீடு இடேல்"** என்றது வீட்டை உண்டாக்காதே என்றவாறு.

சனங்கள் தங்கள் செல்வத்துக்கு ஏற்றபடி வீட்டைக் கட்டுவார்கள். செல்வம் நிலையாமை அறிந்த புத்திமான் வீட்டைக் கூடியவரையில் அடக்கமாகவே கட்டுவான்.

தூதன செல்வத்தை அநுபவிக்கின்றவன், டம்பத்திற்காக மூடர்களுடைய மதிப்பை விரும்பி, வீட்டை விஸ்தாரமாகக் கட்டுவான். அயலாருக்கு மேற்பட்டவனாய் விளங்க விரும்பி மேடையையும் அமைத்து அலங்கரித்து வைத்துவிட்டுக் கீழ்வீட்டில் ஒரு சிற்றறையிற் சென்று முற்பழக்கப்படி அற்பனாய் வாழ்வான்.

இப்படி வாழுங் காலத்தில் அவன் அந்தப் பெரிய வீட்டைத் தன்னுடைய மூத்த புத்திரனுக்கே கொடுக்க வேண்டும் என்றும், அவனால் தன் கீர்த்தி நெடுங்காலம் பிரபல்லியமாகும் என்றும் எண்ணிப், பல கட்டுப்பாட்டுடன் தானபத்திரஞ் செய்து, பிறருக்கு ஒருகாசுங் கொடாமல் இறப்பான்.

அறநெறி அறியாத அவன் புத்திரன், வருமானத்துக்கு அதிகரித்த வீண் செலவுகளைச் செய்து கடன்பட்டு, முடிவில் வீட்டைப் பாதிவிலைக்கு விற்றுச் செல்வான்.

உலகத்திலே உள்ள பெரும் பட்டணங்கள் தோறும் விசாலமாகக் கட்டப்பட்ட எத்தனையோ வீடுகள், தக்க வாடகங் கொடுத்திருப்பவர் இல்லாமையாற் பாழாய்க் கிடக்கின்றன.

இந்த உண்மையை அறிந்த எங்கள் முன்னோர்கள் வீடுகளைச் சிறுகக் கட்டி, ஆசைகளை ஒடுக்கி, தான தருமங்களைப் பெருக்கி, சிவலோக சுகத்துக்கு ஆளானார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலைத் தேசத்தார் வரமுன் இந்த ஈழதேசத்திலும் இந்தியா எனப்படும் பிரதேசத்திலும் நகரங்களில் அலங்கார மனைகள் மிகச் சொற்பமாக இருந்தன.

ஆனால் தமிழ் அரசர்களும் தமிழ் அடியார்களும் பிரதிஷ்டை செய்த தேவாலாயங்களின் விஸ்தாரத்தையும், அலங்காரத்தையும் வெல்லும்படியான கோயில்கள் மற்றெத்தேசத்திலும் இல்லை. இடமும் அலங்காரமும் பெறத்தக்கது தேவாலயமே.

## 19ம் பாடம்

## இணக்கமறிந் திணங்கு

**"இணக்கம்"** என்றது பொருத்தம் **"அறிந்து"** என்றது ஆராய்ந்து **"இணங்கு"** என்றது பொருந்து என்றவாறு.

அறிவீனர் சந்திக்குமிடத்து தம்முள் ஒருவர் ஒருவரது முன் பின் வரலாறுகளை விசாரியாமலும், குணாகுணங்களை அறியாமலும் வேடிக்கைக் கதைகளைப் பற்றியே உறவு கலக்கின்றார்கள்.

அதன்மேல் அவ்வுறவை விஷய போகங்களைத் தொட்டு உறுதியாகும்படி செய்வார்கள். முடிவில் துக்கத்துக்கு ஆளாவார்கள்.

அறிவாளிகள் பழங் குடிப்பிறப்பாலாவது, கல்வியாலாவது, ஞானத்தாலாவது சிறப்புப் பெற்றவர்களோடு உறவு கொள்ள விரும்புவார்கள்.

அறிவாளிகளாக வர எத்தனிக்கின்ற பிள்ளைகள் நல்லவர்களோடு சகவாசம் பண்ணி, அவர்களிடத்துள்ள விஷேச குணங் களை மனனஞ் செய்து, அந்த மனோபாவனையால் தாங்களும் அவற்றைப் பற்றிக் கொள்வார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லோர்கள் என்றது நல்ல மனதை உடையவர்கள், அஃதாவது விதிவிலக்கனுசரணையாலும், பொறுமையாலும், கல்வியாலும், அன்பாலும், பரோபகார முயற்சியாலும் சிறந்தவர்கள்.

தீயோர்கள், தீயோரோடு கூடினால் அதி சீக்கிரத்தில் நாசப்படுவார்கள். தங்கள் தீமையை அறிந்து " ஐயோ மானுடப் பிறப்பைப் பெற்றும் மிருக சாதிகளைப் போலத் திரிகின்றோமே" என்று துக்கப்படுகின்றவர்களுடைய மனம் நல்லவர்களையே பின்பற்றிப் பொருந்த நினைக்கும்.

நல்லவர்கள் பொருத்தமே பொருத்தம். நற்குண இணக்கம் ஒருவனிடம் உள்ளதோ என்று பலமுறை ஆராய்ந்து கண்டால் அவனோடு இணங்கியே வாழ வேண்டும்.

## 20ம் பாடம்

### தந்தைதாய் பேண்

"**தந்தைதாய்**" பிதாவையும் மாதாவையும் "**பேண்**" என்றது பற்றி வாழ்வாயாக என்றவாறு.

ஔவையார் தமது கொன்றைவேந்தனில் " அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம் " என்று உபதேசித்தது இந்த மந்திரத்தை விளக்கும்.

தாயும் தந்தையும் முன்னறி தெய்வங்களே என்றதற்கு ஐயமில்லை. தெய்வம் அறிவு சொரூபமாயும், அன்பு சொரூபமாயும் இருக்கும் எந்த பக்தர்களுக்கு எது அவசியமோ அதை அறிந்து அன்புடன் அருளும்.

இந்தத் தெய்வபக்தி உதயமாகமுன், பிள்ளைகள் தங்கள் தாயிடத்திலும் தந்தையிடத்திலுமே அறிவும், அன்பும் உள்ளனவாக முதலிற் காண்கின்றார்கள்.

பிள்ளைகள் அந்த அநுபவத்தைக் கொண்டே தாய், தந்தையர் காட்டிக்கொடுக்கும் தெய்வத்தினிடம் மேலான அறிவும், மேலான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பும் உண்டென்று விசுவசித்துத் தெய்வ பக்தியைப் பெறுகின்றார்கள்.

அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வங்கள் என்று உணர்ந்த பிள்ளைகள் சதாகாலமும் அவர்களைப் பின்பற்றித் தழுவி நடப்பார்கள். தங்களுக்கு அறிவும் அன்புமில்லாத காலத்தில், அதிக பொறுமையோடு அநேக புத்திகளையும் சுகங்களையும் ஊட்டி வளர்த்தார்களே என்று, நல்ல பிள்ளைகள் நன்றியறிவோடிருந்து தந்தை தாயர்களைச் சகல துன்பங்களினின்றும் காப்பார்கள்.

அவர்களுடைய வீட்டை விட்டுப் பிள்ளைகள் வேறு வீட்டில் சென்று வாழுங் காலத்தில், இயன்ற மட்டும் அவர்களைத் தரிசித்தும், தங்கள் வீட்டுக்கு அழைத்துப் பாராட்டியும், அவர்களுடைய சித்தப்படி நடந்தும், இனிய வார்த்தையாலும் இச்சித்த பொருளுதவியாலும் பூசித்தும் வருவார்கள்.

இவையெல்லாம் மக்கட்குரிய புண்ணிய கர்மங்கள், அக்கர்மங்களுக்குச் சிவபெருமானால் விதிக்கப்பட்ட சுகபலன்கள் சுவர்க்கலோகப்பேறு, மறுபிறவியில் வளந்தளம் பொருந்திய தேசத்தில் ஜனனம், அறிவோடும் அன்போடும், பராபரிக்கும் தந்தை தாய் வாய்ப்பு, நற்புத்திர பாக்கியம், சிறந்த சுற்றத்தார் சகாயம் முதலியனவாகும்.

தந்தை தாய் மீது பகை பாராட்டி வருகின்ற பிள்ளைகள், பிதிர் சாபம் பெற்று வறந்த தேசத்திலும் எளிய குலத்திலும் பிறந்து, சத்துருக்களால் வாதிக்கப்பட்டும், சனங்களால் நகைக்கப்பட்டும், பெருந்துன்பம் அடைவார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 21ம் பாடம்

## நன்றி மறவேல்

**"நன்றி"** என்றது நற்கருமத்தை, **"மறவேல்"** என்றது மனசினின்று தவற விடாதே என்றவாறு.

அறஞ்செய விரும்பு என்ற மந்திரம் நற்கருமத்தைச் செய்யக்கூடிய ஸ்திதியைப் பெற்றவனுக்கு உபதேசமாயிற்று. இந்த மந்திரம் நற்கருமத்தைச் செய்ய இயலாதவனக்கு உபதேசமாகின்றது.

உனக்காவது, உறவினர்க்காவது, உன் சனத்துக்காவது, உலகத்துக்காவது ஒருவன் நன்மை செய்தால் அந்த நன்மையை உன் மனசில் நின்று வழுவ விடலாகாது.

மனம் நற்கருமங்களைப் பற்றி எவ்வளவு சிந்திக்கின்றதோ அவ்வளவும் சுத்தப்படும். சுகிர்த கருமங்களைச் சிந்தியாத மனம் சுத்தப்படாது.

பேரறிவாளிகளாகிய மகான்களுடைய மனம், நினைப்பு, மறப்பற்றுச் சும்மாவிருப்பதுபோலச், சிற்றறிவாளிகளுடைய மனம் சும்மாவிராது, ஒன்றைப் பற்றிக் கொண்டே இருக்கும். பற்றாத காலத்தில் தூக்கத்திற் சென்று விடும்.

பகவான் இருள் மூடியிருந்த ஆத்மாவை ஒளியிற் கொண்டு வரும் பொருட்டு அதற்கு மனமென்ற கருவியைக் கொடுத்து நினைக்கச் செய்தார். புண்ணிய கர்மங்களைப் பற்றி நினையாது போனால் பாப கர்மங்களைப் பற்றியாவது, புண்ணியமும் பாபமும் கலந்த மிசிர கர்மங்களைப் பற்றியாவது நினைக்கும்.

மிசிரகர்ம நினைவுகளும் பாபகர்ம நினைவுகளும் ஜீவாத்மாவுக்குச் சுகவாழ்வைக் கொடா. புண்ணிய கர்மத்தையே மனமானது பாவனைசெய்யவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புண்ணிய கர்மத்தில் பிரதிஷ்டை பெற்ற மனம் தான் பாதுகாத்துவரும் ஆத்மாவுக்குச் சகல ஐசுவரியங்களையும் இந்தப் பிறவியிலேனும் மறபிறவியிலேனும் பயக்கும் என்பது சிவபெருமானது ஆஞ்ஞை.

## 22ம் பாடம்

## பருவத்தே பயிர்செய்

**"பருவத்தே"** என்றது பக்குவ காலத்திலேயே **"பயிர்செய்"** என்றது விதைகளையிடு என்றவாறு.

வேளாண்மைத் தொழில் செய்கின்றவர்கள், எப்படிக் காலதேச வர்த்தமானங்களை அறிந்து, நிலத்தை உழுது, நல்ல வித்துக்களைத் தேடி விதைப்பார்களோ, அப்படியே புத்தியுள்ள பிதா மாதாக்கள் தம் மக்களுக்குப் பாலிய காலத்திலேயே நற்பழக்கத்தையும், நற்கல்வியையும் ஊட்டுவார்கள்.

கிருஷித் தொழிலுக்கு நல்ல நிலம் அவசியமாவது போலக் கல்வித்தொழிலுக்கு நல்லமனம் அவசியமாம்.

வஞ்சனை, பொறாமை, லோபம் முதலிய துஷ்ட குணங்களை அநுசரிக்கின்ற மனசில், உபாத்தியாயர் வித்தியாபீஜங்களை விதைத்தால், அந்த அந்த வித்தைக்குரிய பிரயோசனங்கள் விளையா.

மனம் வயசினால் முதிர்ந்து விசாரணைக்குரிய புத்தியால் கிண்டப்படாமல் கடினமானாலும், வித்தியா பீசங்கள் வேரூன்றா.

ஆதலால் நல்ல தாய் தந்தையர் ஐந்து வயது வரைக்கும் தங்கள் பிள்ளைகளுடைய மனசில், கோபம், பொறாமை, சோகம் முதலிய தோஷங்கள் அடையாமற் காத்து. மனசுக்கு ஆறுதலைக் கொடுத்து, அவர்களை ஆறாம் வயசு தொடக்கமாகத் தக்க ஆசானிடம் ஒப்புவிப்பார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்படிக் குருவினிடம் ஒப்புக் கொடுக்கப்பட்ட புத்திரரது புத்திக்குச் சரியான பார்வை உண்டாவதால் அது உபநயனம் எனப்படும். அஃதாவது நல்ல கண்ணெனப்படும்.

உபநயன கிருத்தியத்தைப் பருவத்திலேயே ஆரம்பித்து அதை ஓயா முயற்சியோடு சித்திக்கச் செய்யவேண்டும்.

## 23ம் பாடம்
## மன்றுபறித் துண்ணேல்

**"மன்று பறித்து"** என்றது மன்னவன் சபைக்குத் தங்கள் குறைகளை உரைக்கும் பொருட்டு வருபவர்களை மருட்டி அவர்களிடம் பொருள் கவர்ந்து, உண்ணேல், **"ஜீவனஞ் செய்யாதே"**என்றவாறு.

அவர் அவர் கருமங்களுக்குத் தக்கபடி பரமேசுவரன் சிலரை வல்லவர்களாக்கியும், பலரை ஏழையராக்கியும் விட்டார். வல்லவர்களில் அரசன் முதலாகவும், மந்திரிமார் அடுத்த படியாராகவும், அவர்களுடைய உத்தியோகஸ்தர் மூன்றாம் வகுப்பினராகவும் படிப்படியாக இருப்பார்கள்.

அரசனுக்குத் தம் குறையை ஓதும்படி வரும் ஏழைகளுக்கு அநேக தடைகளை உண்டாக்கித் தந்திரமாய் அவர்களிடம் பணத்தைப் பறிக்கின்றவர்கள், இராச துரோகிகளாகிக் கொடிய துன்பங்களுக்கு ஆளாவார்கள்.

இவர்கள் தர்ம சாஸ்திரங்களைக் கற்றிருந்தும் ஈசுவரநிச்சயம் இல்லாமையாலும், பகவானுடைய கர்மசக்கரத்தின் இயல்பை அறியாமையாலும் இந்தப் பாதகத்தைச் செய்கின்றனர்.

தேகம் நழுவினபின் ஆத்மாவும் மனோகருவிகளும் தப்பாமல் வேறு சரீரத்தைப் பெறுமென்றும், பூமியில் மறுபடியுஞ் சனித்துப் பொறுத்தற்கரிய பெருந் துன்பங்களை அநுபவிக்க வேண்டுமென்றும் விசுவாசித்தவர்கள் மன்றுபறித்து உண்ணார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 24ம் பாடம்

## இயல்பலாதன செயேல்

**"இயல்பு அலாதன"** என்றது உன் இயல்புக்கு விரோதமான கர்மங்களை, **"செயேல் "** என்றது செய்யாதே என்றவாறு.

இந்த மந்திரத்தில் தோன்றும் இயல்பு அலாதன என்ற தமிழ் வாக்கியம் சமஸ்கிருதத்தில் பரதர்மங்கள் எனப்படும்.

வேதாகம சாஸ்திரங்களில் பரதர்மத்தைச் செய்யாது சுவதர் மத்தையே செய்ய வேண்டுமென்று உபதேசித்தவாறு, ஈண்டு தன் சொந்த இயல்புக்கு மாறான நினைவுகளையாவது, வாக்குக்களையாவது, செயல்களையாவது பாவனை செய்தல் ஆகாதென்று கண்டிக்கப்பட்டது.

சுவதர்மமென்ற இயல்பான தொழில் மாதாவினுடைய கர்ப்பத்திலே பூர்வகர்ம பலனாக அமைக்கப்படும். இதை ஜன்னிய குணமென்றும், பிறப்பியல் பென்றும் கூறுவார்கள். பிறந்தநாள் முதலாகப் பிள்ளைகளிடம் ஓரே விதமான குணங்களைக் காணாமல் பலவித குணங்களைக் காண்கின்றோம்.

சில பிள்ளைகள் ஆதிதொட்டுச் சாந்தமுடையரராயும், வேறு சிலர் தங்கள் நன்மையைக் கருதாமல் பிறர் நன்மையைக் கருதுபவராயும், பலர் பொருட் பற்று மிகவுமுடையவர்களாய்த் தங்கள் கையில் வந்ததைக் கைமாறு பெறாமற் கொடுப்பதற்கு விருப்பில்லாதவர்களாயும், இன்னும் வேறு பலர் பிரித்துப் பார்க்கவும், கூட்டி முடிக்கவும் சக்தியில்லாமையால் ஏவியதை மாத்திரமே செய்யும் புத்தியுடையவராயும் இருக்கின்றார்கள்.

எனவே புத்தி நான்கு இயல்புகளைப் பெற்றிருக்கின்றது. என்பது அநுபவத்தால் அறியலாம். இந்த நான்கு இயல்புகளை வேதாகமங்கள் சதுர்வர்ணங்ளென்று கூறும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாந்த புத்திபெற்றவர்களை ப்ரஹ்மணர்கள் என்றும், பரோபகார புத்திபெற்றவர்களை ஷத்திரியர்களென்றும், விநிமயபுத்தி பெற்றவர் களை வைசிகரென்றும், ஏவலைக் காத்திருக்கும் புத்திபெற்றவர் களைச் சூத்திரமென்றும், கூறுவர்.

இது எல்லாத் தேசங்களுக்கும் பொதுவான ஜன்னியகுணப் பிரிவுபாடு. இந்த மனோதர்ம வர்ணங்களைப் பிறப்பியல்புகள் என்றறியாதவர்கள், சதுர்வர்ணம் என்ற பதம் தேகத்தைப் பற்றிய பிரிவுபாடுகளைக் குறிக்கின்றதென்று எண்ணுகின்றார்கள்.

எப்படி எனில், ஒரு காலத்தில் சாந்தபுத்தியோடு வாழ்ந்தவன், பிரமத்தைத் தரிசிக்கும்பொருட்டுப் பிராணலய யோகம், மனோலய யோகமென்ற முத்திநெறியிற் பிரவேசித்துப், பிரமமென்ற பரசிவத்தை அடைந்தது பற்றிப் ப்ஹ்மணரென்று பெரியோரால் அழைக்கப்பட்டான். இவனுடைய தேகத்தினின்று பிறந்த பிள்ளையையும் ப்ஹ்மணனென்று உபசாரமாக உலகத்தார் கூறினார்கள். அப்பிள்ளை தன்னிடத்துச் சாந்தபுத்தியும், முத்திநெறியில் விருப்பும் இல்லாதிருந்தும் உலகத்தாருடைய எண்ணப்படி தன்னையும் பிராமணனாகக் கொண்டான்.

இப்படியே பரோபகார புத்தியாலும், தைரிய வீரிய சக்திகளாலும் சிறப்புப்பெற்று யாவருக்கும் ஷேத்திரமாக வாழ்ந்தவன் பெரியோரால் ஷத்திரியன் எனப்பட்டான். இவனுடைய பிள்ளை தன்னிடத்தில் ஷத்திரியகுணம் இல்லாதிருந்தும் தன்னையும் ஷத்திரியனாகக் கொண்டான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு வைசியபுத்தி உடையவனுடைய பிள்ளையை, அவன் ப்ராஹ்மண புத்தியாவது, ஷத்திரிய புத்தியாவது சூத்திர புத்தியாவது பெற்றிருந்தாலும் வைசியனென்றே உலகத்தார் பாராட்டுவார்கள்.

இப்படியே சூத்திரனுடைய பிள்ளை ப்ராஹ்மண புத்தியோடாவது, ஷத்திரிய புத்தியோடாவது, வைசிய புத்தியோடாவது பிறந்திருந்தாலும், அவனை மூடலோகம் சூத்திரனென்றே கொள்ளும்.

தேகப் பிரிவுபாடுகள், குண விபாகங்களை மறைத்து நிற்கின்றன என்று அறிந்த மகான்கள் உலகத்தாருடைய வழுக்களை அநுசரித்துப் ப்ராஹ்மண குலத்திற் பிறந்தவர்கள், சிலர் ப்ராஹ்மணராயும், சிலர் ஷத்திரியராயும், பலர் வைசியராயும் சூத்திரராயும் இருப்பார்கள் என்றும், ஷத்திரிய குலத்திற் பிறந்தவர்கள், சிலர் ப்ராஹ்மணராயும், சிலர் ஷத்திரியராயும், பலர் வைசிராயும் சூத்திரராயும் இருப்பார்களென்றும், வைசியகுலத்தில் பிறந்தவர்கள், சிலர் ப்ராஹ்மணராயும் சிலர் ஷத்திரியராயும் பலர் வைசியராயும் சூத்திரராயும் இருப்பார்கள் என்றும், சூத்திர குலத்திற் பிறந்தவர்கள், சிலர் ப்ராஹ்மணராயும், சிலர் ஷத்திரியராயும் பலர் வைசியராயும் சூத்திரராயும் இருப்பார்கள் என்றும் சமாதானம் கூறினர்.

ஞான சாஸ்திரங்களாகிய உபநிஷத்களிலும், சைவசித்தாந்த நூல்களிலும் கூறப்பட்ட ப்ராஹ்மணத்துவம், ஷத்திரியத்துயம், வைசியத்துவம், சூத்திரத்துவம் என்ற பிறப்பியல்புகள் எனப்படும் ஜன்னிய குணங்கள் புத்தியைப் பற்றியே இருக்கும் அன்றித் தேகத்தைப் பற்றியிரா.

ஞான சிரோமணியாகிய ஔவையார் ஞானசாஸ்திரங்களிற் கூறியபடியே ஜன்னிய குணங்களுக்கு மாறான கர்மங்களைச் செய்யலாகாது என்பதையே செந்தமிழில் "இயல்பு அலாதன செயேல்" என்று அருளிச் செய்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாந்தமயமான ப்ராஹ்மணத்துவத்தைப் பெற்ற புத்திமானுக்கு, க்ஷத்திரியனக்குரிய துஷ்ட நிக்கிரகத்தொழிலாவது, வைசியனுக்குரிய வியாபார பண்ட மாற்றுத் தொழிலாவது சூத்திரனுக்குரிய ஏவல் வேலையாவது பொருந்தா. மனம் தனக்கு உவப்பான கர்மங்களைச் செய்யாமல் விபரீத கர்மங்களைச் செய்து சலனப்பட்டுக் கெடும். அப்படியே பரோபகரா புத்தி பெற்றவன் தனக்கு உவப்பான துஷ்ட நிக்கிரக சிஷ்ட பரிபாலனத் தொழில்களை விட்டு மற்ற மூன்று வர்ணத்தாருக்குரிய தொழில்களைச் செய்தால் அவன் மனம் வலிமைகெட்டு ஆத்ம உத்தாரணத்துக்கு (ஈடேற்றத்துக்கு) உதவாது.

இப்படியே எஞ்சிய இருவர்ணத்தாரைப் பற்றி அறிக.

## 25ம் பாடம்

### அரவ மாட்டேல்

**"அரவம்"** என்றது பாம்பு **"ஆட்டேல்** "என்றது ஆட்டாதே என்றவாறு.

கொடிய விஷமுள்ள நாகத்தைப் பிடித்துச் சீவனத்தின் பொருட்டு ஆட்டுங் குறவர் அதற்குப் பயந்தே இருப்பார்கள்.

நாகத்தின் விஷப்பற்கள்ளப் பிடுங்கியும், காலந் தோறும் விஷப்பையிலூறும் விஷத்தைப் பிழிந்தும் வளர்க்கின்ற பாம்பாட்டி அதி ஜாக்கிரதையாய் இருந்து பணத்தைச் சம்பாதித்தாலும் அந்த நாகம் அவனுக்குத் தீமையைத் தரத்தக்கதென்றிருப்பான்.

பாம்பாட்டிகளில் அநேகர் அந்தத் தொழிலைச் செய்யும் பொழுதே பாம்பு தீண்டி இறப்பர்,

அதுபோலத் துஷ்டரைக் கொண்டு ஒருவன் ஜீவனம் பண்ணலும் ஆகாது, ஏவல்வேலை செய்வித்தலும் ஆகாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேராசை, பொறாமை, வஞ்சகம், துரோகம் முதலிய தீக்குணங்கள் ஏறிய மனமுடையவனைத் தன் வீட்டிலாவது வெளிவேலைக்காவது வைக்கலாகாது.

எவ்வளவு ஆதரவாக யஜமானன் நடத்தினாலும் அவனுடைய விஷம் அறிவைக் கெடுத்துக் களவு கற்பழித்தல், கொலை முதலிய கர்மங்களைச் செய்விக்கும்.

ஆதலால் யாவரும் தங்களை அடுத்த வேலைக்காரருடைய குணாகுணாங்களை முற்றாகப் பரிசோதித்தே அவர்களைச் சேர்த்தல் வேண்டும்.

## 26ம் பாடம்

## இலவம் பஞ்சிற்றுயில்

**"இலவம் பஞ்சு"** என்றது இலவம் பஞ்சாற் செய்யப்பட்ட மெத்தையில், **"துயில்"** என்றது படுத்து நித்திரை செய் என்றவாறு.

அறஞ் செய்வதற்குச் சகாயமான ஆகார விதிகளும், ஆசன விதிகளும் தர்மசாஸ்திரத்தில் கூறப்பட்டன.

இந்த மந்திரத்தில் ஆசன விதிகளில் ஒன்று கூறப்பட்டது.

எங்கள் தேசத்திலே உபயோகமாகும் பஞ்சு, இலவமரத்திலும், பருத்திச் செடியிலும் விளையும். பருத்திப் பஞ்சு, வஸ்திரம் நெய்தற்கு உரியது. இலவம் பஞ்சு படுக்கைக்கு உரியது. இலவம் பஞ்சாற் செய்யப்பட்ட மெத்தை தலையணைகளை எவ்வளவு அழுத்துகினும் அவை அடைந்து கடினமாகாமல், வளைந்து விரிந்து மிருதுவாக இருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலவம் பஞ்சு உஷ்ணகாலத்தில் போதுவான குளிர்ச்சியையும், சீதள காலத்தில் போதுமான சூட்டையும் தரும் இயல்புடையது.

இலவம் பஞ்சு மெத்தை, மற்ற மெத்தைகளைப் போலத் தேகத்துக்கு வேதனையைத் தந்து சோம்பல் முதலிய தமோகுணங்களை உண்டாக்காது.

ஆகமங்கள் சயன அறைக்குரிய கருவிகளை மிகச் சாதுரியமாகக் கூறுகின்றன. பதமிட்ட புலித்தோல் மான்தோல்களாற் செய்யப்பட்ட உறையில் காற்றை அடைத்து வைத்திருக்கும் மெத்தை சர்மஜ மஞ்சமென்றும், அன்னம் முதலிய சுத்த பஷிகளுடைய மார்பிலுள்ள தூளி என்னும் மிக மெதுவான இறகுகளால் நிறைக்கப்பட்ட மெத்தையை ஹம்சஜம் என்றும், தாமரை முதலிய சுகந்த மலர்களால் நிறைக்கப்பட்ட மெத்தையைப் பங்கஜம் என்றும், சாமரக் கடாவின் மயிரைச் சுத்தமாக்கி உறையில் அடைத்த மெத்தையை ரோமஜம் கூறும்.

ரோமஜ, புஷ்மஜ, ஹம்சஜ, சர்மஜ மஞ்சங்கள் தேடுதற் கரியனவாய் இருப்பதாலும், அதிக விலை உள்ளனவாய் இருப்பதாலும். இல்லற தர்மிக்கு இலவம் பஞ்சு மெத்தை போதுமான சுகத்தைத் தரும் என்று இந்த மந்திரம் உபதேசிக் கின்றது.

## 27ம் பாடம்

## வஞ்சகம் பேசேல்

**"வஞ்சகம்"** என்றது துராசையினின்று ஜனித்த தோஷங்களை **"பேசேல்** "என்றது பாராட்டாதே என்றவாறு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசையானது விருப்பு வெறுப்பு ரூபமாயிருக்கும், கண்ணுக்குப் புலப்படாததாயினும், அது மனசில் ஒரு விருப்பமாகவாவது, வெறுப்பாகவாவது வந்து ஏறும். நல்ல விஷயத்தை விரும்புகின்ற ஆசையும், தீய விஷயத்தை வெறுக்கின்ற ஆசையும் நல்ல ஆசை எனப்படும். தீய விஷயத்தை விரும்புகின்ற ஆசையும், நல்ல விஷயத்தை வெறுக்கின்ற ஆசையும் துராசை எனப்படும்.

நஷத்திர சோதி கலவாத இருளைக் காரிருள் என்றும், நஷத்திர சோதி கலந்த இருளை வெள்இருள் என்றும், சூரியோதய சமீபத்தில் உள்ள இருளைப் புலரி இருளென்றுங் கூறுவார்கள்.

ஒளியின் சேர்க்கையால் இருள் பலவிதப்படுவது போல, சிவபெருமானது அருட்பிரகாசத்தால் ஆசை என்னும் பாச இருள், நல்ல ஆசை என்றும் அந்த அருட்பிரகாசம் இன்மையால் துராசை என்றும் விபாகப்படும்.

இந்தத் துராசையில் நின்று பிறந்த நினைவுகளும், வார்த்தை களும், செயல்களும் வஞ்சகம் எனப்படும்.

எனவே வஞ்சகம் பேசெல் என்ற மந்திரம் துராசைக்கு அடிமைப்பட்டு நீ ஒருவனைக் கெடுக்க எண்ணவுங் கூடாது, பேசவுங் கூடாது, செய்யவுங் கூடாது என்ற பொருட்களை அடக்கி நிற்கின்றது.

துராசையை மனம் வாக்குக் காயங்கள் பற்றினால், அவை பிறருக்குத் தீங்குகளைச் செய்வதும் அன்றித் தம்மையும் பழுதுபடுத்தித் தமது யஜமானனாகிய ஆத்மாவுக்கும் உத்தாரண ஸ்திதியைப் பழுதுபடுத்தி விடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 28ம் பாடம்
## அழகலாதன செயேல்

**"அழக அலாதன"** என்றது சிறப்பற்ற செயல்களை **"செய்யேல்"** என்றது **செய்யாதே** என்றவாறு.

விதிகளை அநுசரித்தும் நிஷேதங்களை விலக்கியும் வாழ்வது அறமாயினும், அதன் சூஷ்ம கதியான விசால அறிவையும் அன்பையும் பற்றியே நடக்கின்றவன் அறத்திலே சிறப்புப் பெற்றவன்.

நான் கொலை செய்யவில்லை, நான் களவு செய்யவில்லை, நான் கள்ளுண்ணவில்லை, நான் பொய் சொல்லவில்லை, என்று கூறுகின்றவன், கடையிலுள்ள மாமிசத்தை வாங்குவித்துப் புசித்துக்கொண்டும், ஒருவன் மேல் குற்றஞ் சுமத்தி அவனுடைய கீர்த்தியைப் பங்கம் பண்ணிக்கொண்டும், அறிவை மயக்கும் "உவையினை" யும் புகையிலையையும் அடிக்கடி உபயோகித்துக் கொண்டும், தன் சித்தத்தில் உள்ளதை மறைக்கும் பொருட்டுத் தந்திரமான சொற்களால் வேறோர் அர்த்தமாகும்படி பேசிக்கொண்டும் ஒழுகுவானாயின், அவன் அழகுள்ள வாழ்வாகிய பேரறிவையும் பேரன்பையும் அடையமாட்டான்.

அவன் ராஜ தண்டத்துக்கும் ஜனங்களுடைய நிந்தனைக்கும் ஆளாகாது போனாலும், இறப்புப் பிறப்புற்ற துக்கப் பிரவிர்த்தியைப் பற்றியே நின்று உழலுவான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரமேசுரனுடைய கணையைப் பெற்றுத் துக்க நிவிர்த்தி மார்க்கமாகிய முத்திநெறியிலே செல்ல வேண்டுமாகில், சித்த சுத்தியும், சத்திய வாக்கும் ஜீவகாருண்ணியமும் அமைதற்குச் சதாகாலமும் முயலவேண்டும்.

இந்த மேலான சத்துவ குணங்களுக்கு மாறான நிலைகள் அழகு அலாதனவாம்.

எனவே அழகலாதன செயேல் என்ற மந்திரத்தின் அர்த்தம் எதைச் செய்தாலும், சித்தசுத்தியோடு செய்ய வேண்டும் என்பதே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏழாலை மஹாத்மா அச்சகம் 43, இந்து மகளிர ஒழுங்கை கந்தர்மடம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org